முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் விறல்மிண்ட நாயனார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

10.01.2019, வியாழக்கிழமை

1. **அரங்கராசனே அருட்குருவே**
**அண்ணலாக வந்த ஞானகுருவே**
**வரங்களென உன் அருளாசி பெற**
**வையகமே ஞானயுகமாகுமெனக் கூறி**

2. கூறியே ஒளி சூட்சும நூலை
குறையிலா **விளம்பி சிலை திங்கள்**
**தெரியவே இருபானாற்றிகதி குரு வாரம்**
**(விளம்பி வருடம் மார்கழி மாதம் 26ம் நாள் 10.01.2019, வியாழக்கிழமை)**
**தேசிகனுக்கு விறல்மிண்ட நாயனார் யானும்**

3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உயர்வென அரங்கன் காட்டும்
தானதரும நெறிமுறைகளுடன்
தவசியரின் திருவிளக்கு பூசை அன்னதான பூசை

4. பூசை முறைகளுடன் அரங்கன் அழைக்கும்
பூரணமதி நாள் சித்தர் பூசையில்
நேசமுடன் கலந்து மக்கள்
ஞானியரிடம் தீட்சை ஆசி பெற

5. ஆசி பெற மக்களுக்கு பிறவி வழி
அனைத்து கருமாக்களும் விலகி
ஆசி பெற அனைத்து சோடைகளும்
அகன்றுமே நன்மை கூடும்

6. கூடவே அரங்கமகான் போல
குரு எவரும் எளிய வழி இல்லையப்பா
தேடவே மானச சூட்சும பூசையாக
தொடர்ந்து நீ அரங்கனை எண்ணி

7. எண்ணியே பூஜித்து வந்தால்
எண்ணம் வழி குருவருள் பெற்று
மண்ணுலக இடர்களை வென்று
மகத்துவம் உலகோர் அடைவரப்பா

8. அப்பனே ஆசியாக அரங்கனுக்கு
அறுபத்து மூவரும் பேசிவிட்டோம்
ஒப்புக் கொண்டு அரங்கன் அருள்பெற
உயர்ந்த சைவநெறியே சிறந்த நெறி

9. நெறிபட நீங்கள் தயாராகி
நெஞ்சம்தனில் தயவை கூட்டிட
வறுமை துன்பம் போக்கி
வள்ளலாய் அரங்கனும் இறங்கி

10. இறங்கி அருள் புரிவாரப்பா
எல்லா பாதுகாப்பும் கூட்டி
வரங்கள் ஈந்து காப்பாரப்பா
வையகத்துள் எங்களை தொடர்ந்து

11. தொடர்ந்து ஆழ்வார் பெருமக்களும்
தேசிகனுக்கு தொடருவரப்பா
சுடராம் சரவணசோதி ஏற்றிட
சுப்பன் ஆளுமைக்கு உலகம் வருமப்பா ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் விரல்மிண்ட நாயனார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

இவ்வுலகினில் வந்திட்ட ஒப்பற்ற சற்குருவே அருட்குருவே அரங்கமகா தேசிகனே அண்ணலாக வந்திட்ட ஞானகுருவே உமது அருளாசிகளை மக்களெல்லாம் வரங்களாக பெற்று வர, இவ்வுலகமே உமது அருளாசியினால் ஞானயுகமாக ஆகிடுமப்பா என்றே அரங்கா உமது புகழை உலகமெலாம் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் மார்கழி மாதம் 26ம் நாள் 10.01.2019, வியாழக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே விறல்மிண்ட நாயனார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் விறல்மிண்ட நாயனார்.

உயர்வுமிக்க ஞானநெறியான ஆறுமுக அரங்கன் காட்டுகின்ற தூய ஞான நெறிமுறைகளை வைராக்கியத்துடன் ஏற்று கடைப்பிடிப்பதுடன் அரங்கன் கூறும் ஜோதி வழிபாடாகிய திருவிளக்கு பூஜைகளை செய்தும், பசித்தோர்க்கு பசியாற்றுவிக்கும் பரோபகாரமாகிய அன்னதானத்தினை பூஜைக்கு ஒப்பாக பணிவுடன் செய்தும் அரங்கமகான் உலகோரை அழைத்து உலக நலனிற்காக செய்கின்ற பௌர்ணமி சிறப்பு ஞானபூஜைகளான சித்தர் பூஜைகளிலும் கலந்து கொண்டு ஞானிகள் ஆசிகளை பெறுவதுடன் ஞானபண்டிதன் முருகப்பெருமானின் அவதாரமாக வந்துதித்த அரங்கமகா தேசிகனாரின் திருவடி பணிந்து பயபக்தியுடன் தீட்சை உபதேசமும் அடைந்து அரங்கனிடத்து அருளாசிகளை பெற்றிட அருளாசி பெற்றிட்டவர்களின் பிறவிதோறும் தொடர்ந்து வருகின்ற எல்லாவிதமான கர்மவினைகளும் விலகிடும். அரங்கனிடம் ஆசிகளை பெறபெற அனைத்து குற்றங்களும் அவர்களைவிட்டு அகன்று ஓடி நன்மைகள் பல உருவாகிடும்.

இந்த உலகினில் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரைப் போல, உண்மை குருநாதர் எவரும் இல்லையப்பா. அரங்கன் கூறும் எளிய ஞானவழிகளை விட எளிமையான ஞானவழிகள் இவ்வுலகினில் இல்லையப்பா. ஆதலினாலே அரங்கனிடம் பணிந்து மானசபூஜையாக சூட்சுமத்திலே அரங்கனை மனதில் வைத்து தொடர்ந்து பூசைகளை செய்து வந்திட்டால் உங்களது எண்ணத்தின் மூலமாகவே அரங்கமகானின் குருவருள் பெற்று இவ்வுலகினில் உண்டாகிய துன்பங்களில் இருந்து மீண்டு இடர்களை வென்று மகத்துவங்களை அடைந்திடுவார்களப்பா.

உலக மக்களே இதுவரை அறுபத்துமூன்று நாயன்மார்களும் ஒளி சூட்சும நூல் மூலம் ஆசிகளை வழங்கி நின்றோம் அப்பா. உலகோரே நாங்கள் அனைவரும் கூறிய ஆசிகளை ஏற்றுக் கொண்டு உங்கள் மனதில் அரங்கர் நெறியை ஒப்புக் கொண்டு அரங்கனின் அருளைப் பெற்றிடுங்கள்.

அரங்கனின் உயர்ந்த சைவநெறியே உலகினில் ஞானம் தரவல்ல உயர்ந்த நெறியாகும். அரங்கமகா தேசிகனாரின் நெறியினை ஏற்றுக் கொண்டு உங்களது எண்ணத்தில், மனதில் தயவை பெருக்கி வரவர, உங்களது வறுமை நிலைகளை எல்லாம் அரங்கன் அருள் செய்து போக்கி அருள் செய்வாரப்பா. உங்களுக்கு சகல பாதுகாப்பும் பெருகி நிற்கும். உங்களுக்கு அருளாய் வரங்களை தந்து உங்களை காப்பார் அரங்க மகானும். இனி அறுபத்து மூன்று நாயன்மார்கள் எங்களைத் தொடர்ந்து பன்னிரு ஆழ்வார் பெருமக்கள் அரங்கமகா தேசிகனுக்கு ஒளி சூட்சும நூல்தனை உரைப்பார்கள்.

சுடர்மிக்க அருள் ஒளி பொருந்திய சரவண ஜோதி ஏற்றி உலக மக்கள் சரவணஜோதி வழிபாட்டினை செய்து வரவர, இந்த உலகமே முருகப்பெருமானின் ஞானஆட்சியின் கீழ் வந்திடும் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உரைக்கின்றார் மகான் விறல்மிண்ட நாயனார்.

–சுபம்–